*எண். 16 /2025* *நாள்: 19.02.2025*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண். 3, தேர்வாணைய சாலை, சென்னை – 600 003.

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் , வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் தட்டச்சர் பணிக்கான **சிறப்புப் போட்டித் தேர்வு (கணினி வழித் தேர்வு)** கடந்த 08.02.2025 மு.ப. நடத்தப்பட்டது. இதில் பொதுத்தமிழ் மற்றும் பொது அறிவு உத்தேச விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II **(தொகுதி-IIA பணிகள்)-** இல் அடங்கிய பதவிகளுக்கான முதன்மைதேர்வு கடந்த 08.02.2025 மு.ப. நடத்தப்பட்டது. இதில் பொதுத்தமிழ்/பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவுக்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன,

இந்த உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதாவது **26.02.2025** மாலை 5.45–க்குள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள *"Answer Key Challenge"* என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள் வழிமுறைகள் தேர்வாணைய இணைய தளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் (www.tnpsc.gov.in) வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

A. ஜான் லூயிஸ்,இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்